(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்

விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை



3 சைவசமய பாடப்பரீட்சை - 2018

தரம் மூன்று

காலஅளவு	45 நிமிடம்

புள்ளிகள் : 100

இல.	11817
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

திருஞானசம்பந்தர்	சுந்தரர்	நிறைகுடம்	மன அமைதி	எண்ணெய்

1. சைவ சமயத்தவர் மங்கள நாட்களிலும், விசேட தினங்களிலும் ..... வைப்பர்.
2. ..... மனைவி பரவையாருடன் திருவாரூரில் வாழ்ந்து வந்தார்.
3. திருக்கோணேச்சரம் தலத்தின் மீது ..... தேவாரம் பாடி உள்ளார்.
4. இறைவனை ஒன்று கூடி வழிபடுவதால் ..... ஏற்படும்.
5. தீபம் அணையாது ..... ஊற்றுவோம்.

(5x2 = 10 புள்ளிகள்)

2. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

1. திருநாவுக்கரசர் மூன்று வயதில் தேவாரம் பாடினார். ( )
2. 'யமுனை' என்பது இலங்கையில் உள்ள ஒரு நதி. ( )
3. திருஞான சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கு சமணர்கள் தீ வைத்தனர். ( )
4. நாம் திருக்கோவிலுக்குச் செல்லும் போது நீராடாது செல்ல வேண்டும். ( )
5. நவராத்திரி விழாவில் முதல் மூன்று நாட்களும், திருமகளை வழிபடுவர். ( )

(5x2 = 10 புள்ளிகள்)

3. "அ" பகுதிக்குப் பொருத்தமானவற்றை "ஆ" பகுதியிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

"அ" பகுதி		"ஆ" பகுதி
1. திருநீறு	( )	1. அறுபத்து நான்கு
2. திருநாவுக்கரசர்	( )	2. உமாதேவியார்
3. கண்ணன்	( )	3. யமுனா நதி
4. ஆயகலைகள்	( )	4. பசுவின் சாணம்
5. உலக மாதா	( )	5. சூலை நோய்

(5x2 = 10 புள்ளிகள்)

4. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. திலகவதியார் தனது தம்பியை தன்னிடம் சேர்ப்பிக்குமாறு முறையிட்ட இறைவன் பெயரை தருக.

.....

.....

2. நம்பி பூசை செய்த பொல்லாப்பிள்ளையார் ஆலயம் எந்த ஊரில் அமைந்துள்ளது?

.....

.....

3. குழந்தை உபமன்யு எதற்காக அழத்தொடங்கியது?

.....

.....

4. உருத்திராக்கம் என்றால் என்ன?

.....

.....

5. திருவிளக்கை அணையாமற் காத்த எலி மறுபிறப்பில் அடைந்த பேறு என்ன?

.....

.....

6. பாண்டிய மன்னனின் வெப்பு நோயை தீர்க்க சம்பந்தர் பாடிய பதிகம் என்ன?

.....

.....

7. திருக்கோணேச்சர ஆலய தீர்த்தம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

.....

.....

8. ஆலய தொண்டுகள் மூன்று தருக?

.....

.....

9. சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் தோன்றிய தீப்பொறிகள் எங்கே விழுந்தன?

.....

.....

10. ஒரு பிள்ளை முதன் முதலாக எழுதக் கற்க ஆரம்பிப்பதை எவ்வாறு அழைப்பர்?

.....

.....

(10x3 = 30 புள்ளிகள்)

5. பின்வரும் பாடல்களில் வரும் இடைவெளிகளை நிரப்புக.

1. பொன்னார் மேனியனே .....

..... மிளிர் கொன்றை அணிந்தவனே

மன்னே மாமணியே .....

..... இனி ஆரை நினைக்கேனே

(10 புள்ளிகள்)

2. ..... பூண்பதுவும் பொங்கரவம்

பேசுவதும் திருவாயால் .....

..... பூண்பதுவும் கொண்டென்னை

ஈசனவன் எவ்வுயிர்க்கும் .....

(10 புள்ளிகள்)

6. பின்வருவன பற்றி இவ்விரண்டு வாக்கியங்கள் எழுதுக.

1. சிவபெருமான்

அ. .....

ஆ. .....

2. திருவிளக்கு

அ. .....

ஆ. .....

3. திருநாவுக்கரசர்

அ. .....

ஆ. .....

4. திருநீறு

அ. .....

ஆ. .....

5. காளிங்கன்

அ. .....

ஆ. .....

(5x4 = 20 புள்ளிகள்)